அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கழகம் வெளிநடப்பு !... முதல் பக்கத் தொடர்ச்சி

இயந்திரங்களுக்கு பதிலாக, பழையபடி வாக்குச்சீட்டு முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் மற்றும் VVPAT செயல்பாடுகளில் முழுமையான வெளிப்படைத்தன்மை பேணப்படுவதோடு அனைத்துக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் தொழில் நுட்பச் செயல்முறைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இணைய வழியில் புதிதாக விண்ணப்பிக்கும் வாக்காளர்களின் முகவரி மற்றும் தகுதிகளை நேரடியாக சரிபார்ப்பு மூலம் ஆய்வு செய்வதற்கு அரசியல் கட்சிகளின் BLA 2 முகவர்களுக்கு மட்டுமன்றி BLO மற்றும் EROகளுக்கும் கூட போதிய அதிகாரமும், சரிபார்ப்பு வசதிகளும் தற்போது வழங்கப்படவில்லை.

குடிசைப்பகுதிகள், நடைபாதை மற்றும் நடைமேடைகளில் வாழ்பவர்கள், மலைவாழ் குடியிருப்புகள் உள்ளிட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வீடு வீடாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டங்கள் (Public hearing) முறையாக அறவிக்கப்பட்டு விடுமுறை நாட்களில் BLO முன்னிலையில் காணொலிப் பதிவுடன் நடத்தப்பட வேண்டும்.

முன்னறிவிப்பும், விசாரணையுமின்றி எந்த வாக்காளரும் நீக்கப்படக் கூடாது.

“படிவம் 7” ஆட்சேபணைகள் அனைத்தும் பொதுவில் வெளியிடப்பட வேண்டும்.

அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழிசெய்த S.I.R. முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். S.I.R.க்கு முந்தைய வாக்காளர் பட்டியலைக் கொண்டே இனி வரும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது மக்களின் வாக்குரிமையை உறுதிசெய்வதற்கான நடைமுறையாக இருக்க வேண்டுமே தவிர, வாக்குரிமையைப் பறிக்கும் சதி ஆயுதமாக மாற்றப்படக் கூடாது. போதுமான கால அவகாசமும், வாய்ப்புகளும் தரப்பட்டே இனி அப்படிப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

SIR மூலம் நீக்கப்பட்டவர்களின் வாக்குச் சாவடி வாரியான பட்டியலை நீக்கப்பட்ட தற்கான காரணங்களுடன் தமிழில், தேடக்கூடிய வடிவில் எப்போது வெளியிடப் போகிறீர்கள்?

படிவம் 6ல் இடம் பெற்றிருந்த SIR தொடர்பான உறுதிமொழி (Declaration) நிரந்தரமாக நீக்கப்பட்டுவிட்டதா?

SIR மூலம் “இடம் மாறியவர் அல்லது இல்லாதவர்” எனக் கூறி நீக்கப்பட்ட பல லட்சக்கணக்கான வாக்காளர்களில் எத்தனை பேர் வீடு வீடாகச் சென்று நேரடியாக (Door to Door Survey) மூலம் முறையாக சரிபார்க்கப்பட்டுள்ளனர்?

தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களும் விடுபடாமல் சேர்க்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள காலக்கெடுவை அனைத்து கட்சியின் ஆலோசனைகளை பெற நீட்டிக்க வேண்டும்.

SIR மூலம் தகுதியான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் முறையின்றி நீக்கப்பட்டுள்ளனர். இதற்கு முழுப் பொறுப்பேற்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் முன்னெடுக்கப்படும் அனைத்து ஜனநாயகப் போராட்டங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கழகத்தின் கருத்து எடுத்துரைத்து வலியுறுத்தப்பட்டது.

ஜாதிப் பாகுபாட்டால்

பள்ளி மாணவர் தற்கொலையா! வெட்கித் தலைகுனிய வேண்டாமா?

உரிய நடவடிக்கை அவசியம்! கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 24–

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கோவை மாவட்டம், பீளமேடு பகுதியைச் சேர்ந்தவரும், கோவை, அவிநாசி சாலையில் உள்ள அரசு உதவி பெறும் கே.கே.நாயுடு மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்புப் படித்து வந்த மாணவரு மான 16 வயது அகிலன் அக்டோபர் 21 ஆம் தேதி தூக்கிட்டுத் தற் கொலை செய்து கொண்டார் என்ற செய்தி பேரதிர்ச்சிக்குரியதாகும். கல்வி கற்கும் இடத்தில், ‘மாட்டுக்கறி சாப்பிடுவோர் யார்?’ என்று கேள்வி எழுப்பி, அதன் மூலம் ஆசிரியரே பாகுபாட்டை உண்டாக்கும் கூழலை உருவாக்கியதாகச் சொல்லப்படுகிறதே, என்ன கொடுமை! இதையொட்டி, மாணவர்கள் மத்தியில் எழுந்த உரையாடலும், தந்த மன உளைச்சலும் ஒரு மாணவரின் உயிரைப் பறித்திருக்கிறது என்றால், ஜாதியின் பெயரால் எத்தகைய கொடுமை இன்னும் இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது என்பது மனிதகுலத்துக்கே வெட்கமானது இல்லையா?

இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்!

இதற்கு உடந்தையாகவும், இதை மறைக்கும் வகையிலும் செயல்பட்டவர்கள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பள்ளி, கல்லூரி வளாகங்களில் ஜாதி உணர்வுடன் நடந்துகொள்ளும் ஆசிரியர்கள்



பற்றி அவ்வப்போது அறிகிறோம். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றாலும், இன்னும் ஜாதிய மனநிலையில் இருந்து அவர்கள் விடுபடவில்லையென்றால், முதலில் பாடம் நடத்தப்பட வேண்டியது யாருக்கு? சமூகப் பார்வையோ, சிந்தனையோ இல்லாமல் ஜாதி, மத வெறியுடன் நடந்து கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கும் முறைகள் இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் மத்தியில் ஜாதி ஒழிப்புக் கருத்துகள், பெண்ணுரிமைக் கருத்துகள், சமத்துவக் கருத்துகள் பரப்பப்பட வேண்டும். வெறும் ஏட்டுச் சுரைக்காய் அவர்களை மனிதர்களாக்காது! இவற்றுக்கு வழிவகுக்காமல், இச் சமூகத்தை நம்மால் காக்க முடியாது. ஜாதி உள்ளிட்ட போதைகளை மாணவர்களிடமிருந்து ஒழிக்கும் பணி முதன்மையானது.

நீதி கிடைக்க வழி செய்யவேண்டும்!

உரிய உடனடி சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுப்பதில் அரசு ஒரு போதும் தாமதிக்கக் கூடாது. சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராடும் தோழர்கள் மீது நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்து, நீதி கிடைக்க வழி செய்யவேண்டும்.

அருமை மாணவச் செல்வம் அகிலனை இழந்து தவிக்கும் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் நமது இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜாதி ஒழிப்புப் பணியில் முன்னிலும் வேகமாய் ஈடுபடுவோம்!

ஜாதியால் பாகுபாடுகளுக்கு உள்ளானால், அந்த ஜாதியை மாய்க்கும் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய, தம்மை மாய்த்துக் கொள்ளக் கூடாது என்று மாணவச் செல்வங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

ஜாதிக்கு அடையாளம் உண்டா? ஆனால், ஜாதியை அடையாளப்படுத்துகிறார்கள்!

ஜாதி உணர்ச்சி வளர வளர, இன உணர்ச்சியையும், இனமான உணர்ச்சியையும் இழந்து, இன உரிமையைப் பறிகொடுக்கும் நிலை தான் ஏற்படும்!

எச்சரிக்கை! எச்சரிக்கை!

ஆற்றாத இந்தத் துயரைப் பாடமாக ஏற்று, ஜாதி ஒழிப்புப் பணியில் முன்னிலும் வேகமாய் ஈடுபடுவோம்.

கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் உரிய களப் பணியை மேற்கொள்வர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வீரவசனம் பேசும் த.வெ.க.வின் அவல ஆட்சிக்கு

அன்றாடம் நடக்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி!

புதுக்கோட்டையில் இரு சிறுமிகளின் பாலியல் வன்கொடுமையை எடுத்துக்காட்டி, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பதிவு!

சென்னை, அக். 24-

புதுக்கோட்டையைச் சேர்ந்த இரு சிறுமிகளுக்கு வேளாங்கண்ணியில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமையைக் சுட்டிக்காட்டி, வீரவசனம் பேசும் த.வெ.க.வின் அவல ஆட்சிக்கு அன்றாடம் நடைபெறும் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி என்று துணை பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

வேளாங்கண்ணியில் இரண்டு சிறுமிகள் விடுதியில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது: புதுக்கோட்டையைச் சேர்ந்த இரண்டு சிறுமிகளும் வீட்டில் கோபித்துக்கொண்டு வேளாங்கண்ணிக்குச் சென்றதாகக் கூறப்படும் நிலையில் இந்தக் கொடூரம் நடந்துள்ளது.

இத்தகைய குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசு காட்டும் மெத்தனத்தால் பெண்களுக்கு எதிரான வன்முறை நடத்தப்படுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. தமிழ்நாட்டு பெண்களுக்குத் தாங்கள்தான் பாதுகாவலர்கள் என வீரவசனம் பேசுபவர்களின் அவல ஆட்சிக்கு அன்றாடம் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி.

இந்தக் கொடூரக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில்

ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கான கழக மறுசீரமைப்புக் கூட்டங்கள்!

எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை!

சென்னை, அக். 24-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு ரீதியான மறுசீரமைப்புப் பணிகளின் ஒரு பகுதியாக, சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கான கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டங்கள் நேற்று (23.10.2026) வெள்ளிக்கிழமை, மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்றன.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டங்களில், முதலாவதாக திரு.வி.க. நகர், எழும்பூர் மற்றும் துறைமுகம் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கான கழக மறுசீரமைப்புக் கூட்டம் சென்னை ஓட்டேரியில் உள்ள எம்.கே.டி. மஹாலில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, வில்லிவாக்கம் மற்றும் கொளத்தூர் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான கழக மறுசீரமைப்புக் கூட்டம் சென்னை வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ. திருமண மண்டபத்திலும், இறுதியாக அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான கழக மறுசீரமைப்புக் கூட்டம் சென்னை கொரட்டூரில் உள்ள ஹரி பார்ட்டி ஹாலிலும் நடைபெற்றது.

மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை தொடர்ந்து நடைபெற்ற ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இக்கூட்டங்களில், தலைமைக் கழகப் பிரதிநிதிகளான கழக அமைப்புத் துணைச் செயலாளர் எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., மாநிலங்களவை உறுப்பினர் பேரா. ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.





இக்கூட்டங்களில் கழகத்தின் அமைப்பு ரீதியான மறுசீரமைப்புப் பணிகள், சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாக அமைப்புகளைச் சீரமைத்தல், நிர்வாகிகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் கழகத்தின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டங்களில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், இ. பரந்தாமன், ப. ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, பி.கே. மூர்த்தி, எம். விஜயகுமார், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், கே.எஸ். எம். நாதன்,

மாவட்டக் கழக நிர்வாகிகள் தேவஜவகர், ஜி.எம். தேவன்,புனிதவதி எத்திராஜன்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, சொ. வேலு, வி. சுதாகர், எஸ். ராஜசேகர், கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐ.சி. எப். வ. முரளிதரன், எ. நாகராஜன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன், டி.வி. செம்மொழி, கோ. மணி, சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீல கண்டன், எம். இப்ராஹிம் கனி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், கே. வினோத், எஸ். தனசேகர், பி. ஸ்ரீராமலு, நா. ரஞ்சித் விஜயாலயன், எல்.பி.எஃப். மோகன், இரா. வீரமணி, கு. கிருஷ்ணமூர்த்தி, பி. விஜயகுமார், பா. பிரதீப்குமார், எம். விநாயகம், எல். சம்பத்குமார், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, ம. அசோக்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி. சாந்தகுமாரி உள்ளிட்டோரும்,

மேலும் பகுதிக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

திமுக மகளிர் அணி வலைதளப் பதிவு!



தலைமைச் செயற்குழு உறுப்பினர்

இருமன்குளம் பரமகுரு மறைவு!

இன்று இறுதி அஞ்சலி!

சங்கரன்கோவில், அக். 24-

தலைமைச் செயற்குழு உறுப்பினரும் சங்கரன்கோவில் ஒன்றியக் குழு உறுப்பினருமான இருமன்குளம் பரமகுரு (வயது 60) நேற்று (23.10.2026 – வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது தந்தை சங்கரன்கோவில் நகரச் செயலாளராக கழகப் பணியாற்றியவர். பரமகுரு அவர்கள் 1970ஆம் ஆண்டுகளில் இருமன்குளம் கிளைக் கழக செயலாளராக தனது கழகப் பணியை தொடங்கி ஒன்றியப் பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி தற்போது தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்று கழகப் பணிகளை செய்து வந்தார்.

மேலும் 2021-ஆம் ஆண்டு முதல் சங்கரன்கோவில் ஒன்றிய குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாருக்கு மல்லிகா என்ற மனைவியும் மருத்துவர் சுசி, மருத்துவர் நிவேதா என்ற இரு மகள்களும் உள்ளனர். அன்னாரது இறுதிச் சடங்கு இருமன்குளத்தில் வைத்து இன்று நடைபெறுகிறது.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகச் செயல்பட்டுவந்த கே.இ.நெளஃபல், கழகத்தின் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.

அண்ணா அறிவாலயம்
சென்னை – 600 018
நாள்: 23.10.2026

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.